*9*

# நமது பிரதான ஆசாரியர் *மகாபெரியவர்*!

## (4:14–5:10)

இயேசுவின் பிரதான ஆசாரியத்துவம் என்பதே எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் பிரதான ஆய்வுக்கருத்தாக உள்ளது. இயேசு நமது பிரதான ஆசாரியராக இருத்தல் (2:17; 3:1) மற்றும் ஆரோன் மற்றும் லேவியத்துவ ஆசாரியர்களைக் காட்டிலும் அவருடைய மேன்மைத்துவம் ஆகியவற்றைப் பற்றிய பல குறிப்புகளை நாம் கண்டிருக்கிறோம். முன்னதாக நாம், இயேசு நம்மீது பரிதபிக்கும் பிரதான ஆசாரியர் என்ற வகையில் பின்வரும் மாபெரும் பகுதியைப் படித்தோம்.

> வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப்போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் (4:14-16).

4:14ல் உள்ள சொல்விளக்கத்திற்கு விசேஷித்த கவனம் கொடுங்கள்: "தேவகுமாரனாகிய இயேசு என்னும் *மகா பிரதான ஆசாரியர்* நமக்கு இருக்கிறபடியினால்" (என்னால் வலியுறுத்தப் படுகிறது). எபிரெயர் 10:21ல் இயேசு, "பிரதான ஆசாரியர்" என்று அழைக்கப் பட்டிருக்கிறார்.[1] இயேசு *மகா* பிரதான ஆசாரியராக இருக்கிறார்,[2] ஏனென்றால் ...

- *அவர், வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குப் போனவராக இருக்கிறார்* (4:14). மகாப் பரிசுத்த ஸ்தலம் தான் பூமிக்குரிய பிரதான ஆசாரியர் பிரவேசித்த மிகவும் பரிசுத்த இடமாக இருந்தது, ஆனால் இயேசு "பரலோகத்திற்குள்ளாகவே" சென்றார் (9:24).
- *அவர், நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடியவராக இருக்கிறார்* (4:15). இது பூமிக்குரிய பிரதான ஆசாரியர்களின் விஷயத்தில் எப்போதுமே உண்மையாக இருப்பதில்லை.
- *அவர், பாவமற்றவராக இருக்கிறார்* (4:15). இது பூமிக்குரிய பிரதான ஆசாரியர்கள் விஷயத்தில் நிச்சயமாகவே உண்மையாக இருக்கவில்லை

*(காண்க 5:3).*

- *அவர், கிருபையை அளித்து ஆட்சி செலுத்துகிறார்.* பூமிக்குரிய பிரதான ஆசாரியர்கள் சட்டத்தையும் நீதியையும்கூட அளித்து ஆட்சி செலுத்த முடிந்திருந்தது. ஆனால் அவர்களால் கிருபையை அளித்து ஆட்சி செலுத்த முடியாதிருந்தது. இயேசு "ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை" அருளுகிறார் (4:16).

இயேசு *மகாப்* பிரதான ஆசாரியராக - பூமியில் இருந்திருக்கக் கூடிய எந்த பிரதான ஆசாரியரிலும் பெரியவராக - இருக்கிறார் என்பது ஏன் என்பதற்கு எபிரெயர் 5:1-10 வசனப்பகுதியானது கூடுதல் காரணங்களைக் கொடுக்கிறது. (இந்தப் பாடத்தின் முடிவில் நாம் மூன்று காரணங்களைக் கலந்துரையாடுவோம்.) இது இந்தப் புத்தகத்தின் மூன்றாவது "விவாதப்" பகுதியாக உள்ளது, இது கிறிஸ்துவின் மேன்மையான ஆசாரியத்துவத்தைப் பற்றியகலந்துரையாடலின் பின்னணியாக உள்ளது.[3] இவ்வசனப்பகுதியானது, 7:1-10:18ல் உள்ள இயேசுவின் ஆசாரியத்துவம் பற்றிய நீண்ட கலந்துரையாடலுக்கும் அதற்குப் பின்பு 4:11-6:20ல் உள்ள எச்சரிக்கை மற்றும் புத்திமதி கூறுதலுக்கும் நம்மை ஆயத்தப்படுத்தும்.

## பிரதான ஆசாரியர்

எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இயேசுவை பிரதான ஆசாரியர் என்று குறிப்பிட்டபோது, அவரது யூதக்கிறிஸ்தவ வாசகர்கள் அந்த ஒப்புவமையைப் புரிந்துகொண்டனர்; ஆனால் நம்மில் பலர் அதை புரிந்துகொள்ளாமல் இருக்கலாம். நாம், ஆசாரியர்கள் மற்றும் பிரதான ஆசாரியர் ஆகியோருடன் உள்ள பலி முறைமைக்குத் தனிப்பட்ட வகையில் பழக்கமற்றவர்களாக இருக்கிறோம்; இப்படிப்பட்டது, நமது அனுபவத்திற்குப் புறம்பானதாக உள்ளது. எபிரெயருக்கு எழுதிய நிருபம், பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவத்திற்கு விரிவான குறிப்புகளை ஏற்படுத்துவதாலும், நம்மில் பலர் அந்த ஆசாரியத்துவம் பற்றிக் கொஞ்சமே அறிந்திருப்பதாலும், ஒருசில பொதுவான குறிப்புகள் - குறிப்பாக, பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியர்கள் பற்றிய விளக்கங்கள் - முறையானவையாக உள்ளன.

### விசேஷித்த சந்ததியார்கள்

லேவி கோத்திரத்தில் பிறந்த மோசேயின் சகோதரரான ஆரோன் என்பவர்தாம் முதல் பிரதான ஆசாரியராக இருந்தார். ஆரோனின் முதல் மகன் அடுத்த பிரதான ஆசாரியராக இருக்க வேண்டும். பிரதான ஆசாரியத்துவம் என்பது மூத்த மகனில் இருந்து மூத்த மகனுக்குச் செல்ல வேண்டியதாக இருந்தது.[4] ஆரோனின் மற்ற சந்ததியார்கள் ஆசாரியர்களாக ஊழியம் செய்ய வேண்டியிருந்தது, மற்றும் லேவி கோத்திரத்தின் மற்ற எல்லா சந்ததியார்களும் ஆசாரியர்களுக்கு உதவிக்காரர்களாக ஊழியம் செய்ய வேண்டி இருந்தது.




**விசேஷித்த கடமைகள்**

பிரதான ஆசாரியர் இஸ்ரவேல் மார்க்கத்தலைவராக இருந்தார். தெய்வீகத்துவமாக நியமிக்கப்பட்ட குடிமைத் தலைவர் இல்லாத போது, பிரதான ஆசாரியரே மக்களின் பிரதான ஆளுநராக இருந்தார்.

பிரதான ஆசாரியர் பொதுவான சில ஆசாரியத்துவக் கடமைகளைக் கொண்டிருந்தார் (காண்க யாத்திராகமம் 25:30; 27:20, 21; லேவியராகமம் 6:14, 15; 13:2-59; உபாகமம் 17:12). ஆசாரியர்களையும் அவர்களின் ஊழியத்தையும் கண்காணித்தல் என்பது இந்த விஷயத்தில் அவரது முதன்மைப் பொறுப்பாக இருந்தது.

அவர் பிரதான ஆசாரியர் என்ற வகையில் விசேஷித்த கடமைகளையும் கொண்டிருந்தார். கோத்திரங்களின் பெயர்கள் எழுதப்பட்ட மார்ப்பதக்கத்தை அவர் தரித்துக் கொண்டபோது (காண்க யாத்திராகமம் 28:29), அவர் இஸ்ரவேல் மக்களுக்கும் தேவனுக்கும் இடையில் மத்தியஸ்தராக இருந்தார். அவர் ஒருவர் மாத்திரமே ஊரீம் மற்றும் தும்மீம்[5] ஆகியவற்றில் ஆலோசனை கேட்க முடிந்தது (காண்க யாத்திராகமம் 28:30). அவற்றின் மூலமாக அடையப்பட்ட எந்த முடிவும் இஸ்ரவேல் மக்களால் கீழ்ப்படியப் படவேண்டியதாக இருந்தது (எண்ணாகமம் 27:20, 21).

**விசேஷித்த ஒரு நாள்**

பாவநிவாரண நாளைச் செயல்படுத்துதல் என்பது பிரதான ஆசாரியரின் மிகவும் முக்கியமான விசேஷித்த கடமையாக இருந்தது. ஆண்டுக்கு ஒருமுறை வரும் அந்த நாளில், பிரதான ஆசாரியர் தமக்காக ஒன்றும் எல்லா மக்களுக்காக ஒன்றுமாக பலிகளைச் செலுத்தினார். பாவநிவாரண இரத்தத்தை எடுத்துக்கொண்டு அவர், மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்து, அதை உடன்படிக்கைப் பெட்டியின்மீது தெளித்தார். பிரதான ஆசாரியர் மாத்திரமே மகாப்பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிக்க அனுமதிக்கப்பட்டார், அதுவும் அவர் ஆண்டுக்கு ஒருமுறை இந்த விசேஷித்த நாளில் மாத்திரமே பிரவேசிக்க முடிந்தது. எபிரெயருக்கு எழுதிய நிருபம், பாவநிவாரண நாள் பற்றிய பலகுறிப்புகளைக்

கொண்டுள்ளது, எனவே அந்த நாளில் நடைபெற்றதைக் குறித்து நாம் அறிவது அவசியமாக உள்ளது (காண்க லேவியராகமம் 16).

## பிரதான ஆசாரியரின் தகுதிகள்

எபிரெயர் 5:1-10 வசனப்பகுதியானது, பிரதான ஆசாரியரின் தகுதிகளைக் குறிப்பிடுகிறது, பின்பு அந்தக் தகுதிகளை இயேசு பெற்றிருக்கிறார் என்று அது வலியுறுத்துகிறது.[6] நமது வசனப்பகுதியில் பட்டியலிடப் பட்டுள்ள தகுதிகள் பின்வரும் கருத்துக்களை உள்ளடக்குகின்றன: (1) மக்கள் மத்தியில் இருந்து ஒரு அழைப்பு, (2) மக்களுக்காகப் பரிதபித்தல் மற்றும் (3) மக்களிடத்தில் இருந்து *வராத* ஒரு கட்டளை.

### பூமிக்குரிய பிரதான ஆசாரியர்கள் (5:1-4)

(1) *மக்கள் மத்தியில் இருந்து ஒரு அழைப்பு.* தேவனுக்குப் பலிகளைச் செலுத்துவதில் மக்களுக்காகப் பரிந்து பேசுபவராக இருப்பதற்குப் பிரதான ஆசாரியர் "மக்கள் மத்தியில் இருந்து எடுக்கப் பட்டவராக" இருக்க வேண்டியதாயிற்று. ஒரு தூதர் பிரதான ஆசாரியராக இருக்க முடியாது. குறிப்பாக, பிரதான ஆசாரியர், லேவி கோத்திரத்தில் பிறந்தவராக, ஆரோனின் நேரடியான வாரிசாக இருக்க வேண்டும்.

(2) *மக்களுக்காகப் பரிதபித்தல்.* தங்கள் பாவங்களுக்காகப் பலிகளைக் கொண்டு வந்தவர்களுக்காக, பிரதான ஆசாரியர் பரிதவிப்பவராக இருக்க வேண்டும் (வசனம் 2அ). அவ்வாறு அவர் பரிதபிக்கவில்லை என்றால், அவர்களுக்கு அவர் ஒரு நல்ல பிரதிநிதியாக இருக்க முடியாது. ஒரு மனிதர் என்ற வகையில் (வசனம் 1) பிரதான ஆசாரியர், தாம் யாரைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறாரோ அவர்கள் கொண்டிருந்த அதே பலவீனங்களுக்கு உட்படக்கூடியவராக இருந்தார் (வசனம் 2ஆ). இதற்கு நிரூபணம் என்ற வகையில், பிரதான ஆசாரியர் பாவநிவாரண நாளில் மக்களுக்காகப் பலிசெலுத்தக் கூடுவதற்கு முன்னர், அவர் தமக்காகப் பலிசெலுத்த வேண்டியவராக இருந்தார் என்று எழுத்தாளர் குறிப்பிட்டார் (வசனம் 3).

(3) *மக்களிடம் இருந்து வராத ஒரு கட்டளை.* பிரதான ஆசாரியர், தம்மைத் தாமே நியமித்துக் கொண்டவராக இராமல், தெய்வீக நியமனம் பெற்றவராக இருக்க வேண்டும் (வசனம் 4). பிரதான ஆசாரியத்துவம் எவ்வாறு தொடரப்பட வேண்டும் என்பது பற்றி பிரமாணத்தில் குறிப்பிடப் பட்டிருந்தது. தக்க வம்சாவழி என்பது மிகவும் முக்கியமான தகுதியாக இருந்தது. ஒரு மனிதர் இஸ்ரவேல் மனிதராகவும் பரிதபிக்கக் கூடியவராகவும் இருந்தும், அவர் பிரதான ஆசாரியராகத் தகுதிப்பட இயலாதிருக்கலாம்.

### மகா பிரதான ஆசாரியர் (5:5-10)

இயேசு, மேலே பட்டியலிடப்பட்ட மூன்று தகுதிகளையும் கொண்டிருந்தார். உண்மையில் அவர், பூமிக்குரிய வேறு எந்தப் பிரதான ஆசாரியரும் பெரும்பாலும் கொண்டிருக்கக் கூடியதற்கு மேலான அளவில் இவற்றைக் கொண்டிருந்தார். எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், தாம் அடிக்கடி செய்கிறது போல, இந்தத் தகுதிகளை ஏறக்குறைய எதிரான வரிசைமுறையில் கலந்துரையாடினார்.

(3) *மக்களிடம் இருந்து* வராத *ஒரு கட்டளை* இயேசு பிரதான

ஆசாரியராக தெய்வீகத்தினால் நியமிக்கப்பட்டார், அவர் தம்மைத் தாமே நியமித்துக்கொள்ளவில்லை (வசனங்கள் 5, 6). இதற்கு நிரூபணம் என்ற வகையில், பழைய ஏற்பாட்டில் இருந்து இரண்டு வசனப்பகுதிகளை எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் மேற்கோள் காண்பித்தார் (சங்கீதம் 2:7; 110:4) இதில் அவர் தெய்வீகக் குமாரத்துவத்தை ஆசாரியத்துவத்தின் கருத்துடன் ஒன்றிணைத்தார்.

(2) *மக்களுக்காகப் பரிதபித்தல்.* இயேசு *பரிதபிக்கிற* பிரதான ஆசாரியராக இருக்கிறார் (வசனங்கள் 7-10; காண்க 2:17; 4:14-16). நாம் கடந்து செல்ல வேண்டியவற்றை அவரும் கடந்து செல்ல வேண்டி இருந்ததால், அவரால் "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்க" முடியும் (4:15). இதற்கு நிரூபணம் என்ற வகையில், கெத்செமனே தோட்டத்தையும் அதைக் தொடர்ந்து வந்த சிலுவையையும் எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் குறிப்பிட்டார். இயேசு தேவனுடைய குமாரனாக இருந்தார் என்ற உண்மையானது (5:5), பாடுபடுவதில் இருந்தோ அல்லது பாடுகளில் இருந்து பாடங்களைக் கற்பதில் இருந்தோ அவருக்கு விலக்கு அளிக்கவில்லை (வசனம் 8).

(1) *மக்கள் மத்தியில் இருந்து ஒரு அழைப்பு.* இயேசு, *ஒரு மனிதர் என்ற வகையில்* பாடுகளைக் கடந்து சென்றார். அவர் "மாம்சத்தில் இருந்த நாட்களில்" அவரது பாடுகள் நடந்தேறின (வசனம் 7). இந்த விசேஷித்த தகுதியானது, இயேசுவை நமது மத்தியஸ்தராக இருக்கக் கூடியவராக்குகிறது (1 தீமோத்தேயு 2:5).

## ஒரு மகாப் பிரதான ஆசாரியர்

நமது வசனப்பகுதி முழுவதிலும், பிரதான ஆசாரியருக்கான தகுதிகளைப் பொறுத்தமட்டில், பூமிக்குரிய பிரதான ஆசாரியர்களைக் காட்டிலும் இயேசு மேன்மையானவராக (உயர்ந்தவராக) இருக்கிறார் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

- அவர் ஆரோனின் வம்சவழியில் மூத்த மகனாக இருக்கவில்லை, ஆனால் அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார் (5:5).
- அவர் பிரதான ஆசாரியராக இருக்கக் *பூரணமான* தகுதி (வேண்டிய யாவற்றையும்) கொண்டுள்ளார் (5:9அ)
- அவர், கீழ்ப்படிகிறவர்களுக்கு "நித்திய இரட்சிப்பை" அருளுகிறார் (5:9ஆ), இது ஆரோனின் ஆசாரியத்துவத்தினால் அளிக்கப்பட்ட பலிகளின் மூலமாகப் பெறப்பட்ட பாவங்களுக்கான மூடுதலின் அளிப்பு மாத்திரம் என்பதாக இருப்பதில்லை.
- அவர், மேலான முறைமையான மெல்கிசேதேக்கின் முறைமைப்படி நமது பிரதான ஆசாரியராக இருக்கிறார் (5:6, 10). இது அர்த்தப்படுத்துவது என்ன? எழுத்தாளர், புத்திமதியின் இன்னொரு பகுதிக்குப் பின்பு இந்தத் தலைப்பைப் பற்றிக் கலந்துரையாடினார்.

நமது பிரதான ஆசாரியரான இயேசு, *மகாப்பெரியவராக* இருக்கிறார்!

## போதகருக்குக் குறிப்புகள்

*பழைய ஏற்பாட்டுப் பிரதான ஆசாரியர் சிலவேளைகளில், மற்ற எல்லா ஆசாரியர்களைப் போன்று "சாதாரண" பாணியில் உடையணிந்தார். அவர் பிரதான ஆசாரியரால் மாத்திரமே செய்யப் படவேண்டிய கடமைகளை நிறைவேற்றியபோது, அவர் விசேஷித்த நீல நிற உடை ஒன்றை அணிந்தார் (காண்க யாத்திராகமம் 28:31-35). பாவநிவாரண நாளில் அவர், முழுவதும் சணல் நூலால் நெய்யப்பட்ட உடைகளை அணிந்தார் (லேவியராகமம் 16:4, 11-23) இது அந்த நாளுக்கென்றே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது.*

---

குறிப்புகள்

[1]KJV வேதாகமத்தில் *10:21*ல் "high priest" [*"பிரதான ஆசாரியர்"*] என்றுள்ளது, ஆனால் கிரேக்க வசனப் பகுதியில் "high" அல்லது "chief" (*arche*) என்பதற்குப் பதிலாக "great" (*megas*) என்ற வார்த்தை உள்ளது. [2]பழைய ஏற்பாட்டில், "பிரதான" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள எபிரெய வார்த்தை "மாபெரும்" என்று அர்த்தப்படுகிற "பிரதான ஆசாரியர்" (*gadol*) என்ற சொல்விளக்கத்தில் உள்ளது. புதிய ஏற்பாட்டில் "பிரதான ஆசாரியர்" "high priest" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*archiereus* என்ற) வார்த்தை "பிரதான ஆசாரியர்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு மாத்திரமே குறிக்கப்பட்ட "பிரதான [*megas*] முதன்மை ஆசாரியராக [*archiereus*]" இருக்கிறார். [3]முதல் பாடத்தில் உள்ள வரைகுறிப்பைக் காணவும். [4]இருப்பினும், சரீரப்பிரகாரமாக ஒரு குறைபாடு என்பது மூத்த மகனைத் தகுதியற்றவராக்கிவிடும். மற்றும் மூத்த மகன் (கன்னிப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளாதிருத்தல் போன்ற) பல்வேறு பிற வழிகளில் தம்மைத் தகுதியற்றவர் ஆக்கிக் கொள்ளக்கூடும். [5]ஊரீம் மற்றும் தும்மீம் என்பவை, குறிப்பிட்ட சூழ்நிலையில் தேவனுடைய சித்தத்தைத் தீர்மானிக்கப் பயன்படுத்தப்பட்ட கருவியாக (அல்லது கருவிகளாக) இருந்தன. [6]இந்தத் பாடத்தில் காணப்படும் வரைவட்டவணையைக் காணவும்.

| **பிரதான ஆசாரியருக்கு தகுதிகள்** | **தகுதிக்கான காரணம்** | **இயேசுவின் உண்மைநிலை** | **நமக்கான விளைவு** |
|---|---|---|---|
| மக்கள் மத்தியில் இருந்து அழைப்பு (5:1) | தேவனுக்குப் பலிகளைச் செலுத்துவதில் மக்களுக்காகப் பரிந்து பேசுபவராக இருக்க | ஒரு மனிதர் (5:7அ) | இயேசு நமது மத்தியஸ்தராக இருக்க முடியும் (காண்க 1 தீமோத்தேயு 2:5) |
| மக்களுக்காகப் பரிதபித்தல் (5:2) | தேவனுக்கு முன்பாக மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக அவர்களைப் போன்று *உணருதல்* | பரிதபிக்கும் பிரதான ஆசாரியர் (5:7-10) | இயேசு நம்முடன் *உணருகிறார்* (காண்க எபிரெயர் 4:14-16) |
| மக்களிடம் இருந்து *வராத* கட்டளை (5:4) | பணியைச் செய்ய தேவனால்அங்கீகரிக்கப் பட்டிருத்தல் | தெய்வீக நியமனம் பெற்றவர் (5:5, 6) | இயேசுவின் பலி ஏற்கப் பட்டுள்ளது; அவருக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் இரட்சிப்பு நீட்டிக்கப் பட்டுள்ளது |